## தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

## இளநிலை மாணவர் சேர்க்கை 2025-2026

## நேரடி மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு – துணை விண்ணப்பத்திற்கான அழைப்பு

## (Supplementary Application – Spot Admission)

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்பு மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் (**சுயநிதி பட்டப்படிப்புகள் மற்றும் தொழிற்சார் படிப்புகள்**) காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கான **நேரடி மாணவர் சேர்க்கையானது** (Supplementary Application - **Spot Admission**) 29.10.2025 **புதன்கிழமை** அன்று **காலை 10.00 மணிக்குள் தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினத்தில்** நேரடியாக வந்து பங்கேற்க வேண்டும்..

### நேரடி சேர்க்கை நடைபெறும் விதம்

- நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்களின் வருகையைப் பதிவுசெய்து மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டு சேர்க்கை நடைபெறும்.
- கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் 29.10.2025 **புதன்கிழமை** அன்று **தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினத்தில்** நேரடியாக வந்து பங்கேற்க வேண்டும்.

### நேரடி சேர்க்கைக்கான விண்ணப்பக் கட்டண விவரம்:

- இந்த நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் www.suppladmission.tnjfu.ac.in என்ற இணையதள முகவரி வாயிலாக விண்ணப்பித்து, SC/SCA/ST மாணவர்கள் – ரூ. 150/- மற்றும் பிற பிரிவினர் – ரூ. 300/- விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

### நேரடி சேர்க்கைக்கான நிபந்தனைகள்

- இந்தச் சேர்க்கை பல்கலைக்கழகத்தில் உள்ள உறுப்பு மற்றும் இணைப்புக் கல்லூரிகளில் உள்ள **சுயநிதி தொழிற்கல்விப்படிப்புகள்** [B.F.Sc. (Affiliated Private College), B.Tech. (Biotechnology), B.Tech. (Food Technology) and BBA (FEM)] **மற்றும் தொழிற்சார் கல்விப்படிப்புகளில்** (B.Voc. Courses) உள்ள இடங்களுக்கே பொருந்தும்.
- நேரடி சேர்க்கையில் கலந்துகொண்டு இடம் கிடைக்கப்பெற்ற மாணவர்களிடமிருந்து கலந்தாய்வுக் கட்டணம் (SC/SCA/ST பிரிவினருக்கு ரூ. 100/- மற்றும் இதரப்

பிரிவினருக்கு ரூ. 200/-) மற்றும் சேர்க்கைக் கட்டணம் (ரூ. 10,000/-) உடனடியாக இணையதளம் வாயிலாக மட்டுமே வசூலிக்கப்படும்.

- நேரடி சேர்க்கையின் மூலம் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இடம் தவிர மாற்று வாய்ப்பு வழங்கப்படமாட்டது.

**யார் கலந்து கொள்ளலாம்?**

- பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள இளநிலை பட்டப்படிப்புகளுக்கான காலியிடங்களில் படிக்க தகுதியுள்ள மாணவர்கள் அனைவரும் துணைச் சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து கலந்துகொள்ளலாம்.
- மேலும், பொது கலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்று கலந்தாய்வினை தவறவிட்டவர்கள், இடம் கிடைக்கப்பெற்றும் சான்றிதழ்களை சமர்ப்பிக்காதவர்கள் மற்றும் முந்தைய கலந்தாய்வுகளில் பங்கேற்காதவர்கள் மறுமுறை சேர்க்கைக்கான (துணை) விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து கலந்துகொள்ளலாம்.

**யார் கலந்து கொள்ள முடியாது?**

- முந்தைய கலந்தாய்வுகளின் மூலம் இந்த ஆண்டு இடம் பெற்று ஏற்கனவே இப்பல்கலைக்கழகத்தின் உறுப்பு மற்றும் தனியார் இணைப்புக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றவர்கள்.

**நேரடி சேர்க்கைக் கலந்தாய்வு (Supplementary Application – Spot admission) நடைபெறும் நாளில் பின்பற்ற வேண்டியவை**

- நேரடி சேர்க்கைக்கான கலந்தாய்வில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் www.suppladmission.tnjfu.ac.in என்ற இணையதளத்தில் நேரடிக் கலந்தாய்வில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சான்றிதழ்களை 29.10.2025 **காலை 10.00 மணிக்குள்** பதிவேற்றம் செய்து கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தின் நகலையும், அசல் சான்றிதழ்களையும் நேரடி சேர்க்கை நடைபெறுவதற்கான நாளான 29.10.2025 **அன்று** கொண்டுவந்து கலந்துகொள்ளவும்.

- பல்கலைக்கழக உறுப்பு மற்றும் இணைப்புக் (சுயநிதி படிப்புகள்) கல்லூரிகளுக்கான கல்விக் கட்டணம், உணவு மற்றும் தங்குமிடக் கட்டண விவரங்களை (தேவையெனில்) கல்லூரிகளில் நேரடியாக தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

- நேரடி கலந்தாய்விற்கு வருகை தரும் மாணவர்களின் வருகையை பதிவு செய்தபின் தரவரிசை நிர்ணயிக்கப்படும்.
- குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தற்காலிகமானது மற்றும் மாறுதலுக்கு உட்பட்டது.
- தரவரிசை அடிப்படையில் மாணவர்களுக்கு கல்லூரி மற்றும் படிப்பு ஒதுக்கப்படும்.
- நேரடி கலந்தாய்வின் போது, மதிப்பெண் அடிப்படையில் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டவுடன், தேவை ஏற்படின் காத்திருப்பு பட்டியல் உருவாக்கப்படும்.
- நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உறுதி அளிக்க இயலாது.

### காலியிட விவரங்கள்

கலந்தாய்விற்கான காலியிட விவரங்கள் கீழ்கண்டவாறு:

| இளநிலைப் படிப்புகள் | காலியிடங்கள் |
|---|---|
| பி.எப்.எஸ்.சி. (மீன்வள அறிவியல்) – தனியார் கல்லூரி<br>B.F.Sc. (Bachelor of Fisheries Science) – Private college | 5 |
| பி.டெக். (உயிர்தொழில்நுட்பவியல்)<br>B.Tech. (Biotechnology) | 9 |
| பி.டெக். (உணவுத் தொழில்நுட்பவியல்)<br>B.Tech. (Food Technology) | 2 |
| பி.பி.ஏ. (மீன்வள வணிக மேலாண்மை)<br>BBA (Fisheries Entreprises Management) | 11 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்பதனத் தொழில்நுட்பம்)<br>B.Voc. (Industrial Fish Processing Technology) | 1 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்வளர்ப்பு)<br>B.Voc. (Industrial Aquaculture) | 3 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்பிடித் தொழில்நுட்பம்)<br>B.Voc. (Industrial Fishing Technology) | 11 |

நேரடி சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 24.10.2025 அன்று மாலை முதல் www.suppladmission.tnjfu.ac.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுள்ளது.

**மேலும் நேரடி சேர்க்கைக்கான கலந்தாய்வு பற்றி அறிய:**


அலைபேசி: 8122144031

மின்னஞ்சல்: admissionug@tnau.ac.in

**தலைவர்**

இளநிலை மாணவர் சேர்க்கை 2025-26

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா

மீன்வளப் பல்கலைக்கழகம்,

நாகப்பட்டினம் – 614 712.